வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: சரவணகுமார்

தேதி 17.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், நியூசிலாந்து பிரதமருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, 5 உடன்பாடுகள் கையெழுத்தாகி உள்ளன.

நாட்டில் ரயில்வே கட்டமைப்பை வலுப்படுத்தவும், பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாக, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தமிழக சட்டப் பேரவையில், சபாநாயகர் திரு.அப்பாவு மீது இன்று அஇஅதிமுக கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம், தோல்வி அடைந்தது.

புதுச்சேரியில் ஃபெஞ்சல் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட வீடுகளை சீரமைக்க, நிவாரண நிதி வழங்கப்பட உள்ளதாக முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார்.

---

மோடி-நியூசிலாந்து 1 (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், நியூசிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோஃபர் லக்சான்-உடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, பாதுகாப்பு, கல்வி, விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் 5 உடன்பாடுகள்

கையெழுத்தாகி உள்ளன. பொருளாதார அங்கீகாரம் பற்றிய, பரஸ்பர உடன்பாடும் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இந்தியா-நியூசிலாந்து உறவுகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து பேச்சு வார்த்தையின் போது விரிவான முறையில் விவாதிக்கப் பட்டதாகவும், பாதுகாப்புக் கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். பிரதமரின் அறிக்கை குறித்து கூடுதல் விவரங்கள்….

(வாய்ஸ்)

*மோடி-நியூசிலாந்து 2 (18)*

(வாய்ஸ்)

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையே, பரஸ்பர நன்மைக்கான வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் குறித்து, பேச்சு வார்த்தைகளை தொடக்கவும், முடிவு செய்யப் பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். இருதரப்பு விளையாட்டுத் துறை உறவுகளின் 100 ஆண்டுகளை அடுத்த ஆண்டில் கொண்டாட முடிவு செய்யப் பட்டுள்ளதாக, அவர் கூறினார். விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களை பகிர்ந்து கொள்ளவும், விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் மருத்துவத்தில் ஒத்துழைக்கவும், இருதரப்பிலும் வலியுறுத்தப் பட்டதாக அவர் கூறினார்.

நியூசிலாந்தில், இந்தியாவிற்கு விரோதமாக சில சக்திகள் செயல்படுவது குறித்து, இந்தியா இப்பேச்சு வார்த்தைகளில், தனது கவலைகளை பகிர்ந்து கொண்டு, இத்தகைய சக்திகளை கட்டுப்படுத்துவதில், நியூசிலாந்தின் ஆதரவு தொடரும் என நம்புவதாகவும் தெரிவித்தது. தீவிரவாத தாக்குதல்கள், இந்தியா-நியூசிலாந்து உட்பட எங்கு நடந்தாலும், எந்த வடிவத்தில் நிகழ்ந்தாலும், ஏற்கத்தக்கதல்ல என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை, சுதந்திரமான, வளமான, திறந்த நிலைப் பிராந்தியமாக பராமரிப்பதே இருநாடுகளின் நோக்கமே தவிர, நிலப்பரப்பின் விரிவாக்கம் அல்ல என்றும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

*மோடி-நியூசிலாந்து 3 (9)*

இருதரப்பு பேச்சு வார்த்தைகள் குறித்து, நியூசிலாந்து பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் நியூசிலாந்தின் தூதரகத் தொடர்புகள் அதிகரிக்கப்படும் என்றும், பரஸ்பர நன்மைக்கான வரியில்லா வர்த்தக உடன்பாட்டை எட்ட, இரு நாடுகளுமே ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து பிரதமர் திரு. லக்சான், இன்று மாலை புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்திக்கிறார். நேற்று முதல் இந்தியாவில் 5 நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், வரும் புதன் கிழமை மும்பை செல்கிறார்.

---------------------------

*ரயில்வே 1 (18)*

நாட்டில் ரயில்வே கட்டமைப்பை வலுப்படுத்தவும், பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இன்று மாநிலங்களவையில் ரயில்வேத் துறையின் செயல்பாடுகள் பற்றிய விவாதங்களுக்கு அவர் பதில் அளிக்கையில், ரயில்வேத் துறை கடந்த 10 ஆண்டுகளில், 5 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கி இருப்பதாகவும், 2005-2006ஆம் ஆண்டு முதல், ரயில் விபத்துகளின் எண்ணிக்கை 90 சதவிகிதம் குறைந்து இருப்பதாகவும், 2020ஆம் ஆண்டிற்கு மேல், ரயில் கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை என்றும், அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில், ரயில் கட்டணம் குறைவுதான் என்றும் ரயில்வே அமைச்சர் தெரிவித்தார். கும்பமேளா போன்ற சந்தர்ப்பங்களில், ரயில் நிலையங்களில் பயணிகள் நெரிசலை திறம்பட்ட முறையில் நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். ரயில்வேத் துறையின் நிதி நிலை நன்றாகவே இருப்பதாகவும், இதை இன்னும் மேம்படுத்த அரசு முயன்று வருவதாகவும், ரயில்வே அமைச்சர் கூறினார். நடப்பு நிதியாண்டில், இந்தியாவில் ஆயிரத்து 400 ரயில் எஞ்சின்கள்

தயாரிக்கப் பட்டுள்ளதாகவும், நேரடி மோதலை தவிர்ப்பதற்கான கவச் வசதியை 10 ஆயிரம் ரயில் எஞ்சின்களில் நிறுவும் *ரயில்வே* 2 (12)

பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். முன்னதாக, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவாதங்களில பங்கேற்று, ரயில்வேத் துறையின் செயல்பாடுகள் பற்றிய தங்களின் கருத்துக்களை எடுத்துக் கூறினர். ரயில்களில், சுத்தம் மற்றும் உணவின் தரத்தை உயர்த்தத் தேவை இருப்பதாக, அஇஅதிமுக உறுப்பினர் திரு. தம்பிதுரை கூறினார். புல்லட் ரயில்களை நாடே எதிர்பார்த்து காத்திருப்பதாக, தமிழ்மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே வாசன் கூறினார். ரயில்வே துறையில் பாதுகாப்பிற்கும், ஆள் சேர்ப்புப் பணிகளின் பற்றாக்குறைக்கும் இடையே முக்கிய தொடர்பு இருப்பதாக, சிபிஎம் உறுப்பினர் திரு. ஏ.ஏ. ரஹீம் கூறினார். 2014ஆம் ஆண்டிற்கு மேல், ரயில்வேத் துறையில் பல புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதே உண்மை என்று, பிஜேபி உறுப்பினர் திரு. சஞ்சய் சேத் தெரிவித்தார்.

---------------------------

*அப்பாவு* (16)

தமிழக சட்டப் பேரவையில், சபாநாயகர் திரு.அப்பாவு-விற்கு எதிராக, இன்று அஇஅதிமுக கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்தது. குரல் வாக்கெடுப்பில் தீர்மானம் தோல்வி அடைந்ததை தொடர்ந்து, எதிர்கட்சித் தலைவரின் கோரிக்கைபடி, டிவிஷன் முறையில் வாக்கெடுப்பு நடத்தப் பட்டதில், தீர்மானத்திற்கு ஆதரவாக, 63 பேரும், எதிராக, 154 பேரும் வாக்களித்தால், தீர்மானம் தோல்வி அடைந்ததாக, துணை சபாநாயகர் திரு. பிச்சாண்டி அறிவித்தார். சட்டமன்ற எதிர்கட்சித் துணைத் தலைவர் திரு. உதயகுமார் கொண்டு வந்த இத்தீர்மானத்தில், பேரவைத் தலைவர் திரு. அப்பாவு, அவையில் எதிர்கட்சியினரை பேச அனுமதிப்பதில்லை என்றும், அமைச்சர்களுக்கான எதிர்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பேரவைத் தலைவரே பதில் அளிப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. தீர்மானம் தோல்வி அடைந்த

பின்னர், பேரவைத் தலைவர் திரு. அப்பாவு அவையில் பேசுகையில், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேச, திமுக உறுப்பினர்களுக்கு, 6 மணி -23 நிமிடங்களும், அஇஅதிமுக உறுப்பினர்களுக்கு, 12 மணி-26 நிமிடங்களும் வழங்கப்பட்டதாகக் கூறினார்.

---------------------------

*ரங்கசாமி சான்றிதழ்* (17)

புதுச்சேரியில், வாழ்நாள் முழுவதும் செல்லுபடியாகும் வகையில், நிரந்தர ஜாதி சான்றிதழ் வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார். இன்று சட்டப் பேரவையில், இந்த அறிவிப்பை வெளியிட்டு அவர் பேசுகையில், ஒருவருக்கு வாழ்நாளில் ஒருமுறை மட்டும் வழங்கப்படும் இந்த ஜாதி சான்றிதழ் காரணமாக, அரசு அலுவலகங்களுக்கு மக்கள் மீண்டும், மீண்டும் வருவதை தவிர்க்கலாம் என்றும், இதனால் நிர்வாக நடைமுறைகள் எளிதாகும் என்றும் கூறினார். 10,11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, பள்ளியிலேயே நிரந்தர ஜாதி சான்றிதழ் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். புதுச்சேரியில் ஃபெஞ்சல் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட வீடுகளை சீரமைக்க, நிவாரண நிதி வழங்கப்பட உள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார். குடிசை வீடுகளுக்கு 8 ஆயிரம் ரூபாயும், பகுதி அளவில் சேதம் அடைந்த கல் வீடுகளுக்கு 6 ஆயிரத்து 500 ரூபாய் மற்றும் இத்தகைய ஓட்டு வீடுகளுக்கு, 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், சேதமடைந்த 563 வீடுகளுக்கான நிவாரண உதவிகள், வரும் 21ஆம் தேதிக்குள், பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்றும், அவர் தெரிவித்தார். இதனால் அரசுக்கு, 33.78 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும், அவர் கூறினார்.

---------------------------

*ரங்கசாமி-கலைஞர்* (8)

தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி, மொழிக்காக பாடுபட்ட, மதிப்புமிக்க தலைவர் என்றும், புதுச்சேரியில் ஏதாவது ஒரு நல்ல இடத்திற்கு, அன்னாரின் பெயர் சூட்டப்படும் என்றும், முதலமைச்சர்

திரு. ரங்கசாமி கூறியுள்ளார். இன்று சட்டப் பேரவையில், திமுக உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி எழுப்பிய கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில், புதுச்சேரியில் கலைஞருக்கு சிலை வைக்கக் கூடாது என்ற எண்ணம் அரசுக்கு கிடையாது என்றும், உச்சநீதிமன்ற அறிவுறுத்தல் காரணமாகவே, பொது இடத்தில் சிலை வைக்க இயலவில்லை என்றும் கூறினார்.

---------------------------

*புதுச்சேரி வெளிநடப்பு* (10)

புதுச்சேரியில் புதிய மதுபான தொழிற்சாலை வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஆளுநர் இதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என வலியுறுத்தியும், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று, சட்டப் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். பின்னர் காங்கிரஸ் சட்டமன்றக் குழுவின் தலைவர் திரு. வைத்தியநாதன், சட்டப் பேரவைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில், புதிய மதுபான ஆலைக்கு அனுமதிக்கப் படுவதை காங்கிரஸ் எதிர்ப்பதாகவும், புதிய மதுபான ஆலையால், நீராதரங்கள் பாதிக்கப்படும் என்றும் கூறினார். மதுபான ஆலையால், அரசுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்பது ஏற்கத் தக்கதல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

---------------------------

*ரங்கசாமி-சந்திப்பு* (8)

இன்று புதுச்சேரிக்கு வருகை புரிந்த, சென்னையில் உள்ள ஆஸ்திரேலிய துணைத் தூதர் திருமதி சீலாய் ஜாக்கி, முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, மரியாதை நிமித்தமாக அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசினார். முன்னதாக, புதுவை பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தர் பேராசிரியர் ஃபணித்தி பிரகாஷ் பாபுவும் முதலமைச்சர் திரு. ரங்கசாமியை சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்த சந்திப்பின் போது, பல்கலைக்கழகத்தின் கல்விப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் தரணிக்கரசு, பொறுப்பு பதிவாளர் டாக்டர் ரஜினீஷ் பூட்டானி ஆகியோர், உடன் இருந்தனர்.

---------------------------

*தேவேந்திர பிரதான் (10)*

மூத்த பிஜேபி தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் தேவேந்தர பிரதான், புதுடெல்லியில் இன்று காலமானார். அவருக்கு வயது 84. ஒடிசா மாநிலம், தேவ்கார் தொகுதியில் இருந்து, இருமுறை மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 1998-ல், வாஜ்பாய் அமைச்சரவையில், இணையமைச்சராகவும் இருமுறை பதவி வகித்துள்ளார். மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. ஜூயல் ஓராம், ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி உள்ளிட்டோர், டாக்டர் தேவேந்திர பிரதான் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். அன்னாரின் இறுதி சடங்குகள், ஒடிசா மாநிலம் புரியில், நாளை நடைபெறக் கூடும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

---------------------------

குறை தீர்ப்பு (12)

மத்திய அரசின் நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்புத் துறை, அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் மக்கள் குறை தீர்ப்புப் பணிகளை கண்காணிப்பதற்கான CP-Grams வசதியின் செயல்பாடுகள் குறித்த, 34ஆவது மாதாந்திர அறிக்கையை இன்று வெளியிட்டுள்ளது. இதன்படி, மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்கள் வரும் பிப்ரவரி மாதத்தில், பொது மக்களின் 1 லட்சத்து 12 ஆயிரம் குறைகளுக்கு தீர்வு கண்டுள்ளன. சராசரியாக 15 நாட்களில், ஒவ்வொரு குறைக்கும் தீர்வு காணப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கான CP-Grams அறிக்கையும் இன்று வெளியிடப் பட்டுள்ளது. இதன்படி, மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளால், கடந்த பிப்ரவரி மாதம் சுமார் 50 ஆயிரம் குறைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

---------------------------

*பணவீக்கம் (6)*

மொத்த விலைகளின் அப்படையிலான பணவீக்கம், கடந்த பிப்ரவரி மாதத்தில், 2.38 சதவிகிதமாக, சற்றே அதிகரித்துள்ளது. இது அதற்கு முந்தைய மாதத்தில், 2.31 சதவிகிதமாக இருந்தது. பிப்ரவரியில், தாவர எண்ணெய் உட்பட, உணவு தயாரிப்புகளின் விலை அதிகரித்ததே, பணவீக்கம் உயர, முக்கிய காரணம் என்று, மத்திய தொழில்-வணிகத் துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

---------------------------

*பஞ்சாப் (8)*

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில், கடந்த 14ஆம் தேதி இரவு, கோவில் மீது குண்டு வீசப்பட்டதில் தொடர்புடைய நபர் ஒருவரை, இன்று காலை போலீசார் சுட்டுக் கொன்றனர். கூட்டாளியுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற அந்த நபரை போலீசார் துரத்திச் சென்றபோது, அவர்கள் சுடத் தொடங்கியதால், போலீசார் திருப்பிச் சுட நேர்ந்ததாக, காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. சம்பவத்தில் தலைமை காவலர் ஒருவரும் காயமடைந்தார். சுட்டுக் கொல்லப்பட்ட நபரின் கூட்டாளி தப்பி சென்ற நிலையில், தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், நியூசிலாந்து பிரதமருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, 5 உடன்பாடுகள் கையெழுத்தாகி உள்ளன.

நாட்டில் ரயில்வே கட்டமைப்பை வலுப்படுத்தவும், பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து

இருப்பதாக, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தமிழக சட்டப் பேரவையில், சபாநாயகர் திரு.அப்பாவு மீது இன்று அஇஅதிமுக கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம், தோல்வி அடைந்தது.

புதுச்சேரியில் ஃபெஞ்சல் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட வீடுகளை சீரமைக்க, நிவாரண நிதி வழங்கப்பட உள்ளதாக முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது